S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் டிசம்பர் 22 * 2025 * மலர் -1 * இதழ்-204* VOL-1 * ISSUE-204 விலை ரூ.3 * பக்கம் -4

# அடுத்தும் தி.மு.க. ஆட்சியே மலரும்: திராவிட மாடலால் தமிழகம் வெல்லும்!

## ★நெல்லை அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு; ★புதிய திட்டங்களையும் அறிவித்தார்!!

சென்னை, டிச. 22

திராவிட மாடலால் தமிழகம் வெல்லும். அடுத்தும் தி.மு.க. ஆட்சியே மலரும் என நெல்லை அரசு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உறுதிபடக் கூறினார். மேலும் இந்த விழாவில் புதியத் திட்டங்களையும் அவர் அறிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாள் சுற்றுப் பயணமாக நெல்லை சென்றுள்ளார். நெல்லை அருகே ரெட்டியார்ப்பட்டி இரட்டை மலை அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.56.36 கோடியில் பொருநை அருங்காட்சியகம் உருவாக்கப் பட்டு ள்ளது. 54 ஆயிரம் சதுரடியில் கட்டப்பட்டுள்ள இந்த அருங்காட் சியகத்தில் ஆயிரக்கணக்கான தொல்பொருட்கள்நிறைந்துள்ளன. இந்த அருங்காட்சியகத்தை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

மாலை 4 மணிக்கு வண்ணார் பேட்டை அருகே உள்ள டக்கரம் மாள்புரத்தில் நடைபெற்ற கிறிஸ்து மஸ் விழாவில் அவர் பங்கேற்றார்.

அதைத்தொடர்ந்து 2–வது நாளான இன்று காலை நெல்லை யில் நடைபெற்ற அரசு விழாவில் அவர் பங்கேற்றார். இந்த விழா திரு நெல்வேலி அரசு மருத்துவக் கல் லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

அங்கு ரூ.200 கோடி மதிப்பீட் டில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்து வனை கூடுதல் கட்டடத்தை அவர் திறந்து வைத்து ரூ.538.48 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணி கள் மற்றும் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து ரூ.44,924 பய னாளிகளுக்கு ரூ.100.95 லட்சம் கோடி மதிப்பிலான நலத் திட்ட உத விகளை வழங்கினார். மேலும் 50 புதிய பேருந்து போக்குவரத்து சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.







பின்னர் அவர் பேசியதாவது:–

1965–ஆம் ஆண்டு மொழிப்போ ரின் போது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தியாகங்களுக்கும் போராட்டங்க ளுக்கும் பெயர்பெற்ற நெல்லை மண்ணில், நெல்லையப்பர் கோயி லின் வெள்ளித்தேர் பணிகள் முழு மையாக நிறைவடைந்து வரும் ஜன வரி முதல் வாரத்தில் மீண்டும் ஓடும். தமிழர்களின் நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் பூர்வமாக உல கிற்குப் பறைசாற்றும் 'பொருநை அருங்காட்சியகம்' திறக்கப்பட்டிருப்பது தமிழினத் திற்கே பெருமை சேர்க்கும் விஷ யம். இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலத்திலிருந்துதான் தொடங்கி எழு தப்பட வேண்டும் என்பதைத் தகுந்த சான்றுகளுடன் நிரூபித்துள்ளது,

இல்லாத சரஸ்வதி நதியைத் தேடித் திரியும் மத்திய பா.ஜ.க. அர சுக்கு கண் முன்னால் இருக்கும் கீழடி மற்றும் பொருநை நாகரிகத் தின் உண்மைகள் தெரிவதில்லை. பிரதமர் மோடியும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் இந்த அருங்காட்சியகங்களை வந்து நேரில் பார்க்க வேண் டும். 16 ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் முதல மைச்சர் கருணாநிதியால் தொடங்கப்பட்டுத் தனது ஆட்சியில் விரைந்து முடிக் கப்பட்ட தாமிரபரணி –கரு மேனியாறு–நம்பியாறு நதி நீர்இணைப்புத்திட்டத்தால் திருநெல்வேலி மற்றும் தூத் துக்குடி மாவட்டங்களில் சுமார் 23 ஆயிரம் ஹெக் டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தும் கலை ஞர் மகளிர் உரிமைத் திட் டம், கட்டணமில்லா பேருந்து பயணம், புது மைப்பெண்மற்றும்தமிழ்ப் புதல்வன் திட்டங்கள் போன்றவை தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்தியுள்ளன. ராணி அண்ணா அரசு மகளிர் கல் லூரியில் 11 கோடியில் புதிய விடுதி, முக்கூடல் பாப்பாகுடி பகுதியில் கால் வாய் மேம்பாட்டுப் பணி கள் மற்றும் வள்ளியூர் பெரியகுளம் புனரமைப்பு போன்ற பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.

இறுதியாக, ஏழை மக்க ளின் வாழ்வாதாரமான 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பார்க்கும் ஒன்றிய அரசின் போக்கு கண்டிக்கத் தக்கது. இது குறித்து போலி விவசாயி எடப்பாடி பழனி சாமி மூச்சுக் கூட விட வில்லை. காந்தியின் பெயரை நீக்கியதுடன் 40 சதவீத நிதியை மாநிலங்கள் ஏற்க வேண்டும் என நிதிச் சுமையை அதிகரித்துள்ள னர்.

எத்தகைய நிதி நெருக்கடி களும் தடைகளும் வரினும், 'திராவிட மாடல்' அரசு தமி ழக மக்களின் நலனுக்காக வும், தமிழரின் அடையா ளத்திற்காகவும் தொடர்ந்து பாடுபடும், தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடைபோடும். திரா விட மாடலால் தமிழகம் வெல்லும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

முதலமைச்சர் வரு கையை ஒட்டி நெல்லை விழாக்கோலம் பூண்டிருந்தது. சாலையில் இருபுறமும் கம்பங்கள் நடப்பட்டு தி.மு.க. கொடி கள் பறக்கவிடப்பட்டிருந் தன. வழிநெடுகளிலும் தி.மு.க. நிர்வாகிகள் வர வேற்பு பேனர்களை வைத் திருந்தனர். வண்ணார் பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் இருந்து விழா நடைபெற்ற திருநெல்வேலி அரசு மருத் துவக் கல்லூரிக்கு வந்த முத லமைச்சர் மு.க.ஸ்டாலினை ரோட் டில் இருபுறமும் நின்று பொதுமக்கள் உற்சாக வர வேற்பு அளித்தனர். முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி நெல்லை யில் பலத்த போலீஸ் பாது காப்பு போடபட்டிருந்தது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னை, தீவுத்திடலில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு நேரில்சென்றுபார்வையிட்டுஆய்வுசெய்து,பணிகளைவிரைந்துமுடித்திபொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரரை அறிவுறுத்தினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா. சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பள்ளிக்கரணை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாமில் கலந்துக் கொண்ட மாற்றுத்திறானாளிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.

# பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை; ஆசிரியர் மீது 'போக்சோ'' பாய்ந்தது!

தர்மபுரி, டிச. 22–

தர்மபுரி அருகே உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு ஆங்கில ஆசி ரியர் குமரேசன் பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் எழுந்துள்ளது. இதையடுத்து தலைமையாசிரி யர் தர்மபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அந்த புகாரின் பேரில், அரசு பள்ளி மாணவிகளிடம் போலீசார் விசாரணை நடத்தின ர். மொத்தம் 9 மாணவிகளிடம் நடத்திய விசாரணையில் 6 மாணவிகள் ஆசிரியர் குமரேசன் தங்களுக்கு பாலி யல் தொந்தரவு கொடுத்ததாக போலீசாரிடம் வாக்கு மூலம் கொடுத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து தர்மபுரி அனைத்து மகளிர் போலீசார் ஆசிரியர் குமரேசன் (55) மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் தலைமறைவான ஆசி ரியர் குமரேசனை போலீசார் வலைவீசி தேடி வருகின் றனர்.

## கண்ணீர் அஞ்சலி



திருப்பூர், அவினாசிபாளையம்
AG கல்வி குழுமத்தின் சேர்மன்
திரு. A.விஸ்வநாதக்கவுண்டர் கோட்டைத்தோட்டம்
அவர்களின் புதல்வர்
AG கல்வி குழுமத்தின் தாளாளர்
திரு. V.தனராஜசேகர் B.E., M.C.A., அவர்கள்

20.12.2025 சனிக்கிழமை சுமார் 7.00 மணியளவில்
அகால மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் வாடும்...
குடும்பத்தினர்
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்

A.G. கல்வி குழுமம்
அவினாசிபாளையம், திருப்பூர்.
பேராசிரியர்கள் மற்றும் மாணவ - மாணவிகள்



கிருஷ்ணகிரி அருகே கொல்லப்பள்ளி கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத அருள்முருகன் திருக்கோவிலுக்கு சுற்று சுவர் கட்டுவதற்கான பணியினை முன்னாள் காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் பூமிபூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.



## வாணியம்பாடி அருகே உயிரிழந்த கட்டுமான தொழிலாளர் குடும்பத்தினருக்கு நிவாரண தொகை!

### செந்தில் குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!!

வாணியம்பாடி, டிச. 22

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி அருகே தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினராக இருந்த விஜயரங்கம் மற்றும் கஜேந்திரன் இயற்கை மரணம் அடைந்தனர். 2 தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு நல தொகையாக தலா ரூ.55,000 வழங்கும் நிகழ்ச்சி கொல்லகுப்பம் கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, மாதனூர் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் வெங்கடேசன், கொல்லகுப்பம் ஊராட்சித் தலைவர் அர்ச்சனா தாமோதரன் தலைமை வகித்தனர்.

ஆலங்காயம் ஒன்றிய பொருளாளர் சாமுண்டி, ஒன்றியக் குழு உறுப்பினர் குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார் கலந்துகொண்டு, கட்டுமான தொழிலாளர் நிதி ரூபாய் ஒரு லட்சத்து 10 ஆயிரத்தை விஜயரங்கம் மற்றும் கஜேந்திரன் குடும்பத்தினருக்கு வழங்கினார்

நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் நேரு, ரவிச்சந்திரன், சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தாராபுரத்தில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்; பீகார் வாலிபர் கைது!



திருப்பூர்,டிச.22

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பொள்ளாச்சி சாலை அருண் பேக்கரி அருகே தொடர்ந்து கஞ்சா விற்பனை நடைபெறுகிறது என தாராபுரம் மதுவிலக்கு அமலாக்க பிரிவுக்கு நேற்று தொலைபேசி மூலம் ரகசிய தகவல் பேரில் சம்பவ இடத்திற்கு தாராபுரம் மதுவிலக்கு சார்பு ஆய்வாளர் லோகநாதன், தலைமை காவலர்கள் பாலகிருஷ்ணன், ஞான வெங்கடேஷ் ஆகியோர் சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்து சந்தேகத்திற்கு இடமான வட மாநில வாலிபரை பிடித்து விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்ததின் சந்தேகத்தில் அவரை மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையத்திற்குஅழைத்துவந்துவிசாரித்தபோதுபல்லடத்தில் குடியிருக்கும் பீகார் மாநிலம் டியோரியா முசப்பாற்பூர் பகுதியை சேர்ந்த லால் சகாணியின் மகன்அஜய் சஹானி (37) என்பவரிடமிருந்து சுமார் 2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது இவர் மீது போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு, தாராபுரம் குற்றவியல்நீதிமன்றத்தில் ஒப்படைத்து குற்றவியல் நீதிபதி திருமதி உமா மகேஸ்வரி குற்றவாளி அஜய் சஹானி கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



மொடக்குறிச்சி வட்டம், லக்காபுரம் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டியின் திறப்பு விழாநிகழ்வில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி கலந்து கொண்டு, குடிநீர் பைப்பை திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீரை வழங்கி துவக்கி வைத்தார்.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு

## பெங்களூர் - திருவனந்தபுரம் சிறப்பு ரெயில்!

கோவை, டிச.22

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு கர்நாடக மாநிலம் பெங்களூருவில்இருந்து கேரள மாநிலம்திருவனந்தபுரத்துக்கு போத்தனூர் வழியாக சிறப்புரெயில் இயக்கப்பட உள்ளது, இதுதொடர்பாக சேலம் ரெயில்வே கோட்ட நிர்வாகம் வெளியட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது; இன்று சனிக்கிழமை மாலை 3மணிக்கு பெங்களூருவில்இருந்து புறப்படும் பெங்களூரு திருவனந்தபுரம் ரெயில் மறுநாள் காலை6.30மணிக்கு திருவனந்தபுரம் ரெயில் நிலையத்தை சென்றடையும்,

மறுமார்க்கமாக நாளை( ஞாயிற்றுக்கிழமை ) காலை 9.30 மணிக்கு திருவனந்தபுரத்தில் இருந்து புறப்படும்திருவனந்தபுரம்பெங்களூரு சிறப்பு ரெயில் மறுநாள் காலை 3.30மணிக்கு பெங்களூரு ரெயில் நிலையத்ததை சென்றடையும், இந்த ரெயில் வர்கலா,கொல்லம்,காயன்குளம், மாவேலிக்கரை,செங்கண்ணூர், திருவல்லா,சங்கணாச்சேர,கோட்டயம்,எர்ணாகுளம்டவுன், ஆலுவா திருச்சூர், பாலக்காடு,போத்தனூர்,திருப்பூர்,ஈரோடு,சேலம்,பங்காருப்பேட்டை,கிருஷ்ணராஜபுரம்உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் நின்று செல்லும், இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.

போச்சம்பள்ளி அருகே

## பஸ் சக்கரத்தில் சிக்கி 2 வயது குழந்தை பலி!

போச்சம்பள்ளி டிச. 22



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மாதம்பதி கிராமத்தை சேர்ந்த தணிகாசலம் இரண்டு பெண் குழந்தைகள் உள்ள நிலையில் இன்று வழக்கம் போல் இவர்கள் முதல் குழந்தையை பள்ளி வாகனத்தில் ஏற்றும் போது இவரது சின்ன குழந்தை பஸ்ஸின் அடியில் இருப்பதை பார்க்காமல் தனியார் பள்ளி வாகனம் ஓட்டுநர் வாகனத்தை எடுத்துச் செல்லும் போது அடியில் இருந்த குழந்தை நிஷா 2 1/2 முன் சக்கர வாகனத்தின் அடியில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் இதனைக் கண்ட ஊர் கிராம மக்கள் வாகனத்தை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் தணிகாசலம் முதல் பெண் குழந்தை தமிழ்செல்வி குழந்தை பள்ளி வாகனத்தில் ஏற்றும் போது இந்த சம்பவம் நடந்துள்ளது தண்ணிக்காச்சலம் ஜேசிபி ஆபரேட்டராக பணிபுரிந்து வருகிறார் இந்த சம்பவத்தை அறிந்த மத்தூர் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து சமாதானம் செய்து வருகின்றனர் உலகத்தை மத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## மாணவிக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் ஆசிரியர் கைது!

பென்னாகரம் டிச.22

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை தந்த ஆசிரியரை பென்னாகரம் மகளிர் போலீசார் கைது செய்தனர். பென்னாகரம் அருகே உள்ள நடுநிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு அப்பள்ளியின் ஆசிரியரான கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த சுந்தர்ராஜ் (58). அண்மையில் மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்தது தெரியவந்தது. இது பற்றிசக மாணவிகள் அப்பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் கூறியதை அடுத்து தலைமை ஆசிரியர் பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் ஆசிரியர் சுந்தர்ராஜை போக்சோ சட்டத்தில் கைது செய்தனர்.

## கஞ்சா விற்ற வாலிபர்கள் மீது குண்டாஸ் பாய்ந்தது!

கோவை, டிச. 22

கோவை வடவள்ளி போலீசார் கடந்த மாதம் 21ம் தேதி தொண்டாமுத்தூர் ரோடு பகுதியில் உள்ள தனியார் அப்பார்ட்மெண்ட் எதிரே காலி இடத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட தெலுங்குபாளையம், பாரதி ரோடு பகுதியை சேர்ந்த தினேஷ் குமார் (23), நரசிம்மநாயக்கன்பாளையத்தை அடுத்த ராக்கிபாளையத்தை சேர்ந்த ராஜசேகர் (31) ஆகியோரை கைது செய்து, சிறையில் அடைத்தனர்.

இவர்கள் இருவரும் தொடர்ந்துகுற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததால் வடவள்ளி இன்ஸ்பெக்டர் மற்றும் தெற்கு துணை கமிஷனர் கார்த்திகேயன் கைதான தினேஷ்குமார், ராஜசேகர் ஆகியோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க போலீஸ் கமிஷனர் சரவண சுந்தரிடம் பரிந்துரை செய்தனர்.

அப்பரிந்துரையின் பேரில் கமிஷனர் சரவணசுந்தர், 2 பேர் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன்படி கோவை மத்திய சிறையில் உள்ள தினேஷ் குமார் மற்றும் ராஜசேகர் ஆகியோருக்கு தடுப்புக்காவல் ஆணை வழங்கப்பட்டது.

## காங்கேயத்தில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

காங்கேயம் டிச 22:

காங்கேயம் பேருந்து நிலையத்திற்குள் புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் பெரியாரின் பெண்கள் அமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் 2005 எனும் திட்டத்தை, சதித்தனமாக விபிஜி ராம்ஜி எனும் பெயரில்.கிராமப்புற கூலி விவசாய தொழிலாளர்களின் வயிற்றில் அடித்து,

மாநில உரிமைகளை பறித்து,இந்தி சமஸ்கிருதத்தை திணித்து மகாத்மா காந்தியின் பெயரை அழிக்கத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் பெரியாரின் பெண்கள் அமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் காங்கேயம் பேருந்து நிலையத்திற்குள் நடைபெற்றது.

## பைசாபசார் மற்றும் YES வங்கி மேம்படுத்திய Paisa Save கிரெடிட் கார்டு அறிமுகம் – மேம்பட்ட உணவு மற்றும் பயண நன்மைகள்!

சென்னை, டிச.22

இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் கிரெடிட் சந்தை மற்றும் இலவச கிரெடிட் ஸ்கோர் பிளாட்ஃபார்ம் Paisabazaar மற்றும் இந்தியாவின் ஆறாவது பெரிய தனியார் வங்கி YES BANK, இணைந்து உருவாக்கிய YES BANK Paisabazaar Paisa Save கிரெடிட் கார்டின் மேம்படுத்தப்பட்ட பதிப்பை அறிவித்துள்ளன. இந்த புதிய கார்டு, அதன் வகையில் மிக உயர்ந்த உணவு மற்றும் பயண Cashback நன்மைகளை வழங்குகிறது. உணவு மற்றும் பயணச் செலவுகள் 6% Cashback வழங்கும் இந்த மேம்படுத்தப்பட்ட Paisa Save கிரெடிட் கார்டு, எந்த சேர்க்கை கட்டணமும் இல்லாமல் வலுவான மதிப்பை தருகிறது. இது பயணிகள், உணவுப் பிரியர்கள் மற்றும் அடிக்கடி உணவு உண்ணும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தேர்வாகும். மேலும், இந்த கார்டு தினசரி செலவுகள் சேமிப்பையும் வழங்குகிறது மற்றும் நவீன இந்தியாவின் வாழ்க்கை முறை கிரெடிட் கார்டுகளில் மிகவும் நன்மையுள்ள கார்டாகும். வாடிக்கையாளர்கள் உணவு மற்றும் பயண செலவுகள் 6% நன்மைகள் மூலம் மாதத்திற்கு ₹3,000 வரை Cashback பெறலாம். இந்த வரம்புக்குப் பிறகு, இந்த வகை செலவுகளில் அனைத்தும் 1% Cashback ஐ தொடர்கிறது. மேலும், பயனர்கள் உடனடியாக விர்ச்சுவல் YES BANK Paisa Save RuPay கிரெடிட் கார்டை செயல்படுத்தி, தினசரி UPI அடிப்படையில் கிரெடிட் பரிவர்த்தனைகளை சீராக செய்ய முடியும்.



பா.ஜ.க. விழப்புரம் தெற்கு மாவட்டம் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் நிகழ்ச்சிக்கு சிறப்புரையாற்று வருகை புரிந்த நயினார் நாகேந்திரன் தமிழ்நாடு மாநில தலைவர் சட்டமன்ற குழு தலைவர் பாஜக. சிறப்பு அழைப்பாளர்களாக அஇஅதிமுக கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் இரா.குமரகுரு முன்னாள் திருப்பதி திருமலா தேவஸ்தான அறங்காவலர் உறுப்பினர் மற்றும் திருக்கோவிலூர் அஇ அதிமுக மாநில எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணை செயலாளர் AVM (எ) A.வினாயகமூர்த்தி அஇஅதிமுக கழக உறுப்பினர்களுடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.



கிருஷ்ணகிரி நகராட்சி, இராயப்ப முதலிய தெருவில் உள்ள ஜோஸ் பேலஸில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சேலம் பூம்புகார் விற்பனை நிலையம் நடத்தும் கைவினை கண்காட்சியை (Crafts Expo) மாவட்ட ஆட்சித்தலைவர்ச.தினேஷ் குமார் துவக்கி வைத்தார். உடன், பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் நரேந்திரபோஸ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



வருகின்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிட நிரந்தர கழகப் பொதுச் செயலாளர் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் ரிஷிவந்தியம் திருக்கோவிலூர் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட திருக்கோவிலூர் (எ) வினாயகமூர்த்தி விருப்பமனு தாக்கல் செய்தார். கள்ளக்குறிச்சி மாவட்ட கழகச் செயலாளர் இரா. குமரகுரு நல்லாசியுடன் திருக்கோவிலூர் அஇஅதிமுக மாநில எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் AVM(எ) A.வினாயகமூர்த்தி ரிஷிவந்தியம் திருக்கோவிலூர் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட விருப்பமனு தாக்கல் செய்தார். திருக்கோவிலூர் 18,வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் AVM V.முகேஷ்(எ)ரகு ரிஷிவந்தியம் திருக்கோவிலூர் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட விருப்பமனு தாக்கல் செய்தார்.




அவிநாசி அரசு மருத்துவமனை முன்பு தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் போராட்டம் நடந்தது.

மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு

## இழப்பீடு வழங்க மலைவாழ் மக்கள் கோரிக்கை!

உடுமலை,டிச.22

உடுமலை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உடுமலை மற்றும் அமராவதி வனச்சரங்கள் உள்ளன.இங்குள்ள கோடந்தூர்,பொறுப்பாரு, ஆட்டுமலை,ஈசல்தட்டு,குழிப்பட்டி, குருமலை, மாவடப்பு உள்ளிட்டகுடியிருப்புகளில் மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களது பிரதான தொழில் விவசாயமாகும்.ஆனால் சமதள பரப்பை போன்று இங்கு அவ்வளவு எளிதாக விவசாயம் செய்ய இயலாது. அடைமழையும்,கடும் வறட்சியும்,வனவிலங்குகளும் சாகுபடி பணிக்கு பெருத்த இடையூறை ஏற்படுத்துகிறது. அந்த வகையில் வடகிழக்கு பருவமழையின் தாக்கத்தால் உடுமலை பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட பீன்ஸ் பயிர்கள் முற்றிலுமாக சேதம் அடைந்து உள்ளது.இதனால் விவசாயிகள் பெருத்த இழப்பை சந்தித்து உள்ளனர்.

இது குறித்து மலைவாழ் விவசாயிகள் கூறுகையில்,

பருவமழைக்கு முன்பு நிலத்தை உழுது பண்படுத்தி பட்டர்பீன்ஸ் சாகுபடி செய்தோம்.உழவு, நடவு, பராமரிப்பு என ஏக்கருக்கு ரூ 10 ஆயிரம் வரையில் செலவாகி உள்ளது.நல்ல முறையில் வளர்ந்து வந்த பயிர்கள் பருவமழையின் தாக்கத்தால் அழிந்து விட்டது. இதன் காரணமாக வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு உள்ளது. வனப்பகுதியில் இயற்கையாக விளைகின்ற பீன்ஸ்க்கு பொது மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. இதனால் மலை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் அதிகாரிகள் உதவ வேண்டும். அத்துடன் அதிகாரிகள் ஆய்வு செய்து மழையால் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். என்று தெரிவித்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



காஞ்சிபுரம் தேரடியில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்கு அனுமன் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு மீண்டும் 2026 இல் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக வர வேண்டி மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி சோமசுந்தரம் சிறப்பு பூஜை செய்து வழிபட்டார் இந்நிகழ்வில் பகுதி செயலாளர் கோல்டு ரவி ஒன்றிய செயலாளர் களக்காட்டு ராஜு மாவட்ட கைத்தறி பிரிவு செயலாளர் வில்வபதி. அம்மா பாலு சம்பத் தனபால் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்

# வந்தவாசியில் மின் சிக்கன வார விழா பேரணி!

## நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தரணி வேந்தன் கொடியசைத்து தொடக்கி வைத்தனர் !!



வந்தவாசி,டிச.22

வந்தவாசியில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்சார்பில்மின்சிக்கனவாரவிழாவையொட்டி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் மின் சிக்கன வார விழா வந்தவாசி செயற் பொறியாளர் வே.சரவணதங்கம் தலைமையில் நடைபெற்றது. உதவிசெயற்பொறியாளர் தி.நாராயணன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தரணிவேந்தன், கொடியசைத்து தொடக்கி வைத்தார் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 முதல் 20 வரை மின்சிக்கன வாரம்கடைபிடிக்கப்படுகிறது. இதை யொட்டி வந்தவாசிகோட்டம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி வந்தவாசி கோட்டை மூலையில் புறப்பட்டு, காஞ்சிபுரம் சாலை, பழைய பேருந்து நிலையம், பஜார் வீதி, தேரடி வழியாக புதிய பேருந்து நிலையஅணுகு சாலையில் நிறைவடைந்தது. பேரணி யில்,கலந்துகொண்டோர்

மின் சிக்கனம் குறித்தும், மின் பாதுகாப்பு குறித்தும் பதாகைகள் ஏந்தி, முழக்கமிட்டு சென்றனர். மின்சார உபகரணங்கள் நட்சத்திர முத்திரை சரி பார்த்து வாங்கவும்,சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்தவும், பாதுகாப்பான முறையில் மின்சாரத்தை பயன்படுத்தும் முறையும் விளக்கமாக அச்சிடப் பட்ட துண்டு பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கபட்டது.

இந்த நிகழ்ச்சியில் , வந்தவாசி ,கிராமியம் சு.சசிகுமார் , பொறியாளர் முருகு பாலசுந்தரம், உதவிசெயற்பொறியாளர் ,சரவணன்,பாபு,வாசு மற்றும் மின்வாரிய பணியாளர்கள், ஏஏபி நர்சிங் கலலூரி மாணவ மாணவிகள் 200 க்கும் மேற்பட்டோர் பங்குபெற்றனர். உதவி மின் பொறியாளர் வந்தவாசி தெற்கு உதவி செயற்பொறியாளர் பஞ்சமூர்த்தி நன்றி கூறினார்.

# தோட்டக்கலை மாணவர்களுக்கு அன்பு அறம் செய் அறக்கட்டளை கிராம தங்கள் பாடத்திட்டமாக விவசாயிகள் சந்திப்பு!



கம்பம்;டிச.22

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டியில் ஆர். வி. எஸ் பத்மாவதி தோட்டக்கலை கல்லூரி இறுதியாண்டு மாணவர்களுக்கு கிராம தங்கள் பாடத்திட்டமாக அன்பு அறம் செய் அறக்கட்டளை சுருளிப்பட்டியில் உள்ள விவசாயிகளை சந்தித்து விவசாயிகளின் அனுபவத்தை மாணவர்கள் கேட்டறிந்து தங்களின் பாடப் புத்தகத்தில் எழுதினர். இதில் விவசாயி பாலகிருஷ்ணன் கோவை கொடி பதியம் இடுவதன் செயல்முறைகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார் கோவை கொடி வளர்ப்பினால் நாள்தோறும் ஐந்து பெண்களுக்கு வேலை தருவதுடன், கோவை செடி வளர்ந்த பின் தமிழ்நாடு மட்டும் அல்லாமல் கேரளாவிற்கும் வளர்ந்த செடிகளை ஏற்றுமதி செய்கின்றார் இந்த பதிய செடிகள் முறையாக வளர்வதற்கு தட்பவெப்ப நிலை சமநிலைப்படுத்துவதற்கு நான்கு பக்கமும் பச்சை வலை அமைத்து செடிகளை நன்றாக வளர்க்கின்றார்.

பதியங்களுக்கு இயற்கை உரமே பயன்படுத்துகின்றார், மூன்று வகையான மண் பயன்படுத்தி கோவை செடிகளை வளர்க்கின்றார் என்பதனை மாணவர்களுக்கு எடுத்து கூறினார் இதில் அன்பு அறம் செய் அறக்கட்டளை இயக்குனர் சுருளிப்பட்டி ரா.அன்பு ராஜா விவசாயி பாலகிருஷ்ணன் அவர்களிடம் செடிகள் வளர்வதற்கு எத்தனை நாட்கள் ஆகும்,இந்த செட் எத்தனை சதுர அடியில் அமைக்கப்பட்டது,வளர்ந்த செடிகளை விவசாயிகளுக்கு எவ்வளவு ரூபாயில் தருகின்றீர்கள் என்று அவரிடம்தங்கள் பாடத்துக்கு தேவையான அனைத்து கேள்விகளும் கேட்கப்பட்டது. நிகழ்வில் உள்ளூர் விவசாயிகளான சரவணன் கலந்து கொண்டார்.





தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் ஏலகிரியில் மாநில அளவிலான முதல் நாள் பயிற்சி பட்டறையில் மாநில தலைவர் வெ.மகேந்திர குமார் முன்னுரை வழங்கிய பொழுது அருகில் மாநில, மாவட்ட, மேனாண், மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, இலக்கிய அணி. ஆகிய நிர்வாகிகள் அனைவரும் பங்கு பெற்று பயிற்சி ஆசிரியர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

# நாட்டு நலப்பணித் திட்ட முகாம்!



அலங்காநல்லூர்.டிச.22

மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் மதுரைவெள்ளைச்சாமி நாடார் கல்லூரி சார்பாக நாட்டு நலப் பணித்திட்ட முகாம் தொடங்கியது .

இதில், மாணவர்கள் பங்கேற்ற வாக்குரிமை உங்கள் கடமை என்பது குறித்து விழிப்புணர்வு பேரணியாக சென்றனர்.பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார் .கல்லூரி பேராசிரியர்கள் பழனி குமார்,சந்திரன், மணிகண்டன், ஆகியோர் முன்னிலை வைத்தனர். சமுதாயக் கூடத்தின் முன்பாக தொடங்கிய , இந்த பேரணி பழைய காவல் நிலையம், பஸ் நிலையம், அய்யப்பன் கோவில் ,கேட்டு கடை மற்றும் கல்லணை பகுதி வரை சென்று ,புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தது. இதில், முன்னதாக , கல்லூரி மாணவர்கள், உரிமை உங்கள் கடமை, நீட்டு உன் விரலை அதுமாற்றும் இந்த உலகை, வாக்களிக்க தவறாதீர்கள் ,போன்ற வாசகங்கள் அச்சிடப்பட்டு,கையில் பதாகைகள் ஏந்தி சென்று திருப்பினர். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இந்த முகாம் ஒரு வாரம் தொடர்ந்து நடைபெறும் .பாதுகாப்பு ஏற்பாடுகளை அலங்காநல்லூர் போலீசார் செய்திருந்தனர்.



# ஆண்டிபட்டி வீர ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா!

ஆண்டிபட்டி டிச 22

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி மேற்கு ஓடைத் தெருவில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவை முன்னிட்டு ஆஞ்சநேயருக்கு விபூதி, மஞ்சள் ,குங்குமம் ,பால், தயிர், தேன், இளநீர் ,பழங்கள், சந்தனம் உள்பட 21 வகையான அபிஷேகமும், ஆராதனை பூஜைகளும் நடைபெற்றது .தொடர்ந்து தீப ஆராதனை காட்டப்பட்டது. நவகிரக தோஷங்களை நீக்கி, தடைகளை உடைத்து, சோதனைகளை சாதனையாக்கி, கலியுகத்தில் தீய சக்திகளை அழித்து, தர்மத்தை காத்து அருள் பாலிக்கும் வீர ஆஞ்சநேயர் பகவானை பக்தர்கள் பய பக்தியுடன் வழிபட்டனர். அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார் .

விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு துளசி, செந்தூரம் ,லட்டு, கேசரி, வடை உள்ளிட்ட பிரசாதங்கள் வழங்கப்பட்டு, அன்னதானம் வழங்கப்பட்டது .நிகழ்ச்சிகளை ஆஞ்சநேயர் திருக்கோவில் விழா கமிட்டியார் செய்திருந்தனர்.



# முதுகுளத்தூர் தொகுதியில்அதிமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு!

ராமநாதபுரம், டிச.22

வரும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் முதுகுத்தூர் தொகுதியில் போட்டியிட கமுதிவடக்கு ஒன்றிய அதிமுக செயலர் ஆர்.இராஜேந்திரன்விருப்ப மனு அளித்தார் அப்போது மாவட்ட கழக செயமாலாள் எம்.ஏ.முனியசாமி மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் வடமலையான் கமுதி கிழக்கு ஒன்றிய செய லாளர் ஆர் எம்ஆர் முனியசாமி, ஒன்றிய ஜெயலலிதா பே ரவை செயலாளர் செந்துரான் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்

அதிமுக தலைமை நிர்வாகிகளான முன்னாள் அமைச்சர்கள் தளவாய் சுந்தரம், வைகை செல்வன், கோகுல இந்திரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அருகே உள்ள இந்தோ-தீபெத் எல்லைப் பாதுகாப்புப் படை பயிற்சி மையத்தில், 44 வார கால அடிப்படைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த 1244 வீரர்கள் பணிக்கு திரும்பும் அணிவகுப்பு மற்றும் சாகச நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.



# வாணியம்பாடி அருகே உயிரிழந்த கட்டுமான தொழிலாளர் குடும்பத்தினருக்கு நிவாரண தொகை!

## சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் வழங்கினார் !!

வாணியம்பாடி, டிச. 22

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினராக இருந்த விஜயரங்கம் மற்றும் கஜேந்திரன் இயற்கை மரணம் அடைந்தனர். 2 தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு நல தொகையாக தலா ரூ.55,000 வழங்கும் நிகழ்ச்சி கொல்லகுப்பம் கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, மாதனூர் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் வெங்கடேசன், கொல்லகுப்பம் ஊராட்சித் தலைவர் அர்ச்சனா தாமோதரன் தலைமை வகித்தனர்.

ஆலங்காயம் ஒன்றிய பொருளாளர் சாமுண்டி, ஒன்றியக் குழு உறுப்பினர் குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார் கலந்துகொண்டு, கட்டுமான தொழிலாளர் நிதி ரூபாய் 1 லட்சத்து 10 ஆயிரத்தை விஜயரங்கம் மற்றும் கஜேந்திரன் குடும்பத்தினருக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் நேரு, ரவிச்சந்திரன், சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக ஸ்ரீபெரும்புதூர் தொகுதி தி.மு.க. கள ஆய்வுக் கூட்டம்!



ஸ்ரீபெரும்புதூர்,டிச.22

ஸ்ரீபெரும்புதூர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகு தியில் அடங்கிய ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில், 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு செங்காடு ஊராட்சியில் நமது வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் செயல் திட்டத்தின்படி தமிழ்நாடு தலை குனியாது என்ற கொள்கை முன்னேற்றின்படி கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மேவலூர் குப்பம் கோபால் தலைமை வகித்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பூத் முக்கிய அமைப்பது குறித்தும், தேர்தலை எவ்வாறு அணுகுவது என்பது குறித்தும் பேசி பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

இதில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கிளை கழக நிர்வாகிகள் இளைஞரணி மாணவரணி மகளிர் அணி நிர்வாகிகளுக்கு தேர்தல் பணி குறித்து செயல் விளக்க ஆலோசனை வழங்கப்பட்டது. ஏறையூர் காட்றம்பாக்கம் பென்னலூர் தத்தனூர் கடுவஞ்சேரி போன்ற ஊராட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு கணேஷ் பாபு மற்றும் ஏறையூர் பரமசிவம் ஊராட்சி மன்ற தலைவர் சசிரேகா சரவணன் கோவிந்தம்மாள் தாஸ் மற்றும் கல்பனா யுவராஜ் பண்ருட்டி தணிகாசலம் தண்டலம் மனோஜ் குமார் கொளத்தூர் ஊராட்சி மன்ற பொறுப்பு தலைவர் ஹரி கிருஷ்ணன் டான்பாஸ்கோ துணை சேர்மன் தகவல் தொழில்நுட்பம் செல்வம் தத்தனூர் கிளைச் செயலாளர் புருஷோத்தமன் கிளைச் செயலாளர் கிளாய் மோகன் உட்பட முகவர்கள் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.



# தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் சார்பில் ஓய்வூதியர் தின விழா!

திருப்பத்தூர் டிச.22

திருப்பத்தூர் நகராட்சி ஈத்கா மைதானம் பகுதியில் உள்ள திருப்பத்தூர் ரோட்டரி சங்க அலுவலகத்தில் நேற்று தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் சார்பில் ஓய்வூதியர் தின விழா மாவட்ட தலைவர் ராஜு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றினார். மாநில பிரச்சார பிரிவு செயலாளர் கருணாநிதி, மாநில செயலாளர் தினமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாநில பொதுச் செயலாளர் திருவெங்கடேஸ்வரன் மற்றும் நல்லாசிரியர் விருது பெற்ற காணிநிலம் முனிசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். இந்த நிகழ்வில் நிர்வாகிகள் சசிகுமார், ரமேஷ்குமார், மோகன்தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் சந்திரன் நன்றி கூறினா

# கொடைக்கானலில் 100 அடி பள்ளத்தில் பாய்ந்த பிக்அப் வாகனம்!



கொடைக்கானல்,டிச.22

கொடைக்கானல்மேல்மலை கிராமமான மன்னவனூர் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த பிக்அப் வாகனம் 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

மன்னவனூர் பகுதியை சேர்ந்த செல்லப்பாண்டி என்ற சேர சோழ பாண்டி 28, தினகரன் 38, விஜயன் 38, ஆகிய மூவரும் பிரதான மன்னவனூர் ரோட்டில் பிக்அப் வாகனத்தில் சென்றுள்ளனர். வாகனத்தை செல்லப்பாண்டி ஓட்டி சென்றுள்ளார். இந்நிலையில் ரோட்டில் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் இடது பக்கவாட்டில் உள்ள 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. வாகனத்தில் இருந்த மூவரில் செல்லப்பாண்டி என்ற சேர சோழ பாண்டி, தினகரன் ஆகிய இருவர் பலத்த காயமடைந்தனர். சிறிய காயங்களுடன் விஜயன் தப்பினர்.

108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் மூவரையும் சிகிச்சைக்காக மன்னவனூர் கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் படுகாயமடைந்த செல்லப்பாண்டி என்ற சேர சோழ பாண்டி மற்றும் தினகரன் ஆகிய இருவரும் மேல் சிகிச்சைக்காக கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்திற்கான காரணம் குறித்து கொடைக்கானல் போலீசார் விசாரிக்கின்றனர்.

# புதுக்கோட்டைஅ ருகே நார் தொழிற்சாலையில் கொழுந்து விட்டு எரிந்த தீ ; ரூ.பல லட்சம் மதிப்பிலான நார் இயந்திரங்கள் சேதம்!

## தீயணைப்பு துறையினர் விரைந்தனர்!!

புதுக்கோட்டைடிச.22

புதுக்கோட்டைஅருகே தனியார் நபருக்கு சொந்தமான தென்னை நார் தொழிற்சாலையில் வெல்டிங் வைக்கும் போது ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக பல லட்சம் ரூ பாய் மதிப்புள்ள தென்னை நார் மற்றும் எந்திரங்கள் தீக்கிரையாகி நாசமானதல

2 தீயணைப்பு வாகனங்களைக் கொண்டு 1 மணி நேரத் திற்கு மேலாக தீயை அணைக்க போராடிவரும் தீய ணைப்புத் துறையினரால் பரபரப்பு. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வம்ப ன் பகுதியில் ஆலங்குடியைச் சேர்ந்த செல்வராஜ் மகன் பிரிட்டோ என்பவருக்கு சொந்தமான தென்னை நார் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இதையடுத்து தொழிற்சாலையில் வெல்டிங்



வைக்கும் பணி நடைபெற்ற போது, அதிலிருந்து ஏற்பட்ட தீப்பொ றி பட்டதில் தென்னை நார்கள் தீப்பற்றி எரியத் தொடங்கியது. உடனே அங்கிருந்த தொழிலாளர்கள் தண்ணீரை ஊற்றி தீயை



அணைக்க முயன்ற போதிலும் தென்னை நார் என்பதால் தீ விரைவாக பரவியது.

உடனடியாக ஆலங்குடி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டதன் பேரில் விரைந்து வந்த ஆ லங்குடி தீயணைப்பு நிலைய அலுவலர் ராஜ்குமார் த லைமையிலான மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்தனர் தீயணைப்பு துறையினர் வாகனத்தோடு சம்பவ இட த்திற்குவிரைநந்து தீயை அணைக்கும் முயற்சியில் தீய ணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

ஆனால் ஒரு வாகனத்தில் இருந்த தண்ணீர் மற்றும் உபகரணங்களைக் கொண்டு தீயை அணைப்பது சாத் தியமற்றதாக இருந்ததால் உடனடியாக புதுக்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கிருந்து மற்றொரு தீயணைப்பு வாகனம் வரவழை க்கப்பட்டது. மேலும் 2 வாகனங்களும் சேர்ந்து 1 மணி நேரத்திற்கு மேலாகதீயைஅணைக்கபோராடி வரும் தீயை அனை க்க முடியாததால் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான தெ ன்னை நாற்களும் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான தொழிற்சாலை உபகரணங்களும் தீக்கிரையாகி கொளுந்து விட்டு எரிந்த ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்ப டுத்தியது.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத புதிய வாக்காளர்கள் மற்றும் 01.01.2026 மைய நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கான சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடிமையங்களிலும் நடைபெற்றது. இதன்ஒருபகுதியாக, வி.க.நகர்சட்டமன்றத் தொகுதி, வி.க.நகர் மண்டலம், வார்டு77க்குட்பட்ட டிமல்லஸ் சாலையில் உள்ள இந்து ஒற்றுமைக் கழக நடுநிலைப்பள்ளியில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

# தூத்துக்குடி மாவட்ட வரைவு வாக்காளர்கள் பட்டியல் வெளியீடு!

தூத்துக்குடி டிச.22

வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிரதிருத்தம் 2026ன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர், ஆட்சியர் இளம்பகவத் வெளியிட்டார்.

அதன்படி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் 197947 வாக்காளர்கள், தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் 236461 வாக்காளர்கள், திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் 222631 வாக்காளர்கள், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் 207054 வாக்காளர்கள், ஓட்டப்பிடாரம்(தனி)சட்டமன்றதொகுதியில்232536 வாக்காளர்கள், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் 231529 வாக்காளர்கள் என மொத்தம் 1,32,81,558 வாக்காளர்கள் உள்ளனர் .

தூத்துக்குடி மாவட்டத்தில் 162527 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

நீக்கப்பட்டதற்கான காரணங்கள் சரியில்லை என ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் ஜனவரி 18ம் தேதி வரை தெரிவிக்கலாம்.

இடம் மாறியவர்கள் படிவம் 8, புதியதாக சேர்ப்பவர்கள் படிவம் 6 ஆகியவற்றை பூர்த்தி செய்து ஆவணங்களுடன் வழங்கி, வாக்காளர் பட்டியலில் ஜனவரி 18ஆம் தேதிக்குள் இணைத்துக் கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்ளவும் மேலும் ஒரு மாத கால அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி வந்த முதல்வர் ஸ்டாலினுக்கு தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு!

தூத்துக்குடி டிச.22

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் வாகைக்குளம் வந்த அவருக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்கீதாஜீவன், தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனை தொடர்ந்து, சபாநாயகர் அப்பாவு, தூத்துக்குடி எம்பி கனிமொழி, மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் காவல் கண்காணிப்பாளர்அல்பர்ட்ஜான், ஆணையர் ப்ரியங்கா, அமைச்சர்கள் நேரு, ராமச்சந்திரன், மனோ தங்கராஜ், தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன், எம்.பி. வில்சன், எம்எல்ஏக்கள் மார்க்கண்டேயன், சண்முகையா, ரூபி மனோகரன், ராஜா, தமிழரசி, அப்துல் வஹாப், தூத்துக்குடி மேயர் ஜெகன்பெரியசாமி, திருநெல்வேலி மேயர் கிட்டு என்ற ராமகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன், ஆகியோர் வரவேற்றனர்.

வரவேற்பு நிகழ்ச்சியில் துணை மேயர்கள் ராஜ், ஜெனிட்டா, முன்னாள் அமைச்சர்கள் சுரேஷ்ராஜன், தங்கவேலு, முன்னாள் எம்பி ஞானதிரவியம், முன்னாள் எம்எல்ஏக்கள் மாலைராஜா, முத்துலெட்சுமி, கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிச்சந்திரன், கோட்டாட்சியர் பிரபு, மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, நிர்மல்ராஜ், அன்னலெட்சுமி, கலைச்செல்வி, மாநில அணி நிர்வாகிகள் வசந்தம் ஜெயக்குமார், அன்பழகன், பொன்சீலன், புளோரன்ஸ், உமரிசங்கர், கணேஷ்குமார் ஆதித்தன், ஆறுமுகம், நகர்மன்ற தலைவர் கருணாநிதி, தூத்துக்குடி வடக்கு தெற்கு, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டத்தைச்சேர்ந்தநிர்வாகிகள்வடக்குமாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், துணை செயலாளர் ராஜ்மோகன்செல்வின், மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், துணை செயலாளர் கீதாமுருகேசன், வடக்கு மாவட்ட திமுக அணி அமைப்பாளர்கள் அபிராமிநாதன், கவிதாதேவி, குபேர்இளம்பருதி, ராமலெட்சுமி, அந்தோணி ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் பிரதீப், நிக்கோலஸ்மணி, அருணாதேவி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டு ராஜா, ரமேஷ், கஸ்தூரிதங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராஜா, ராதாகிருஷ்ணன், பிரபாகரன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஐயாதுரை பாண்டியன், மாநகர அணி அமைப்பாளர்கள் ஜீவன்ஜேக்கப், அருண்சுந்தர், ஆனந்தசேகர், கிறிஸ்டோபர்விஜயராஜ், முருகஇசக்கி, ஜெயகனி, துணை அமைப்பாளர்கள் செல்வின், மகேஸ்வரன்சிங், கருப்பசாமி, ராமச்சந்திரன், ரவி, சங்கரநாராயணன், நைஸ்பரமசிவம், வக்கீல் ரூபராஜா, செந்தில்குமார், சத்யா, மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், ராஜ்குமார், ஒன்றிய செயலாளர்கள் காசி விஸ்வநாதன், இம்மானுவேல், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, மும்மூர்த்தி, செல்வராஜ், முருகேசன், பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், சுரேஷ்குமார், மேகநாதன், ஜெயகுமார், கவுன்சிலர்கள் ஜெயசீலி, பவானி, வைதேகி, ஆறுமுகம், ஜாக்குலின் ஜெயா, ஜான்சிராணி, ஆறுமுகம், விஜயகுமார், இசக்கிராஜா, சரவணக்குமார், அந்தோணி பிரகாஷ் மார்சலின், வட்ட செயலாளர்கள் பொன்பெருமாள், சுப்பையா, ரவீந்திரன், ராஜாமணி, பாலகுருசாமி, சுரேஷ் மகாராஜா, முன்னாள் பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில் குமார், உட்பட பலர் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



சங்ககிரி காவல்துறை சார்பில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை சங்ககிரி போலீஸ் டி.எஸ்.பி. தனசேகரன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# பென்னாகரம் அருகே பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை!

## போக்சோவில் ஆசிரியர் கைது!!

பென்னாகரம் டிச.22

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை தந்த ஆசிரியரை பென்னாகரம் மகளிர் போலீசார் கைது செய்தனர். பென்னாகரம் அருகே உள்ள நடுநிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு அப்பள்ளியின் ஆசிரியரான கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த சுந்தர்ராஜ் (58). அண்மையில் மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்தது தெரியவந்தது. இது பற்றிசக மாணவிகள் அப்பளியின் தலைமை ஆசிரியரிடம் கூறியதை அடுத்து தலைமை ஆசிரியர் பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் ஆசிரியர் சுந்தர்ராஜை போக்சோ சட்டத்தில் கைது செய்தனர்.



# சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் 3,62,429 வாக்காளர்கள் நீக்கம்!

## கலெக்டர் பிருந்தாதேவி தகவல்!!

சேலம் டிச .22

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டலின் படி, சேலம் மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் நான்காம் தேதி, சிறப்பு திருத்த முறை வாக்காளர் பட்டியல் கணக்கீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. சேலம் மாவட்டத்தில் உள்ள, 11 சட்டமன்ற தொகுதிகளிலும், வாக்காளர்களுக்கு, வீடு வீடாக சென்று வாக்கு நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவங்களை வழங்கினர். தொடர்ந்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, திரும்பப் பெறும் பணியிலும் ஈடுபட்டனர். வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்திட ,அவ்வப்போது சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு, அதன் வாயிலாக, வாக்காளர்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து, படிவங்களை பூர்த்தி செய்தும் பெற்றனர். அதனைத் தொடர்ந்து, டிசம்பர் 19ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சேலம் மாவட்டத்தில் உள்ள, 11 சட்டமன்ற தொகுதிகளுக்கான, வரைவு வாக்காளர் பட்டியல், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் வெளியிடப்பட்டது. மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான பிருந்தா தேவி,வரைவு வாக்காளர் பட்டியலை, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், பட்டியலை வெளியிட்டார். 11 சட்டமன்ற தொகுதிகளில், மொத்தம் 3,62,429 வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் பிருந்தா தேவி கூறும்போது, மொத்தம் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில், 1,00,974 வாக்காளர்கள் இறந்தவர்களின் பெயர்கள் உள்ளதாகவும் குடியிருப்பில் இல்லாதவர்கள் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்கள் என 2,41,284 நபர்களும், இரட்டைப்பதிவில் 20,171 வாக்காளர்களும், ஆக மொத்தம் 3,62,429 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தின்வழிகாட்டுதலின்படி, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் 1200 வாக்காளர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டுமென உத்தரவிட்டதையடுத்து சேலம் மாவட்டத்தில் உள்ள, 11 தொகுதிகளுக்கான 3,264 வாக்குச் சாவடிகளில், வாக்குச்சாவடி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 3,468 வாக்குச்சாவடிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: தற்கொலை செய்த முருக பக்தருக்கு இந்து முன்னணி அஞ்சலி!

தூத்துக்குடி டிச.22

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றாத விவகாரத்தில், தற்கொலை செய்து கொண்ட முருக பக்தர் பூர்ண சந்திரனுக்கு தூத்துக்குடியில் இந்து முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

தூத்துக்குடி மாநகர மாவட்ட தலைவர் இசக்கி முத்துகுமார் தலைமையில் சிவன் கோவில் தேரடி அருகில் இருந்து ஊர்வலமாக சென்று வைகுண்டபதி பெருமாள் கோவிலில் மோச தீபம் ஏற்றப்பட்டது. பிஜேபி கிழக்கு மண்டல தலைவர் ராஜேஷ் கனி முன்னிலை வகித்தார். மேற்கு மண்டல தலைவர் சுதாகர் தலைமையில் டுவிபுரம் 5 தெருவில் மோட்ச தீபம் ஏற்றப்பட்டது. சரவணகுமார், நாராயண ராஜ் மாவட்ட பொதுச் செயலாளர் மேற்கு மண்டல துணை தலைவர் ஆறுமுகம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.



சேலம் கோட்டை அழகிரிநாத சுவாமி கோவிலில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி வரும் 30–ம்தேதிநடக்கிறது. பக்தர்கள்தரிசனம்செய்யஆன்லைன் முன்பதிவு கோவிலில் நடைபெற்று வருகிறது.

# மேட்டூர் அருகே அனுமன் ஜெயந்தி விழா!

மேச்சேரி டிச.22

சேலம் மாவட்டம்மேட்டூர்அருகே குள்ளமுடையானோர் நால்ரோடு தேசிய நெடுஞ்சாலையில் பழம்பெரும் ஸ்ரீவீர ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இந்த கோவிலுக்கு தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் சுற்றுலா வாகனம், லாரி உள்ளிட்ட கனரக வாகனங்கள் வெளியூர் செல்லும் போது இந்த கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து பிறகு செல்வது வழக்கம். அதேபோன்று சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொதுமக்களும் ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் கோவிலில் வழிபாடு செய்வது காலகாலமாக நடைபெற்று வருகிறது.



இந்த நிலையில் அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் 1,008 வடை மாலை மற்றும் பூ அலங்காரங்கள் செய்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொதுமக்களும், அரசியல் பிரமுகர்களும் கோவிலுக்கு சென்று வழிபட்டு சென்றனர். இதனை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. கோவில் தர்மகர்த்தா சங்கர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.



# கே.எஸ் இ தனியார் நிறுவனம் சார்பில் மடத்துக்குளம் அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை பிரிவுக்கு தேவையான உபகரனங்கள் அன்பளிப்பு!

மடத்துக்குளம் டிச.22

பொள்ளாச்சி திண்டுகல் தேசிய நெடுஞ்சாலையில் பழநி உடுமலை எல்லை பகுதியில் அமைந்துள்ளதால் சாலைவிபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பல்வேறு படுக்கை வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சை பிரிவு செயல் பட்டு வருகிறது. மாதத்தில் 15 லிருந்து 30 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் இந்த சிறிய மருத்துவனையில் நடப்பது குறிப்பிடதக்கது இந்நிலையில் இந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவிக்கு தேவையான உபகரணங்களை சாமிநாத புரத்தில் செயல் பட்டு வரும் பிரபலமான கே எஸ் இ லிமிடெட் சி எஸ் ஆர் திட்டத்தின் மூலம் வழங்கியுள்ளது. உபகரணங்களை கே எஸ் இ லிமிடெட் நிறுவனத்தின் முழு நேர இயக்குனர்திரு.டோனிஜார்ஜ்நிறுவனமேலாளர் ரமேஷ் குமார் ஆகியோர் கலந்துகொண்டு வழங்கினர் இந்நிகழ்வில் மருத்துவர்கள் ஜோதிமணி விக்னேஷ் செவிலியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த அறுவை சிகிச்சை பிரிவி சிறப்பாக இயங்கிட உபகரணங்களை வழங்கியதற்காக அரசு மருத்துவமனை நிர்வாகமும் பொதுமக்களும் கே.எஸ் இ நிறுவணத்தாருக்கு நன்றி தெரிவித்தனர்.

# காவேரிப்பட்டணத்தில் குவிந்த குப்பையால் நோய் பரவும் அபாயம்; பொதுமக்கள் அவதி!

காவேரிப்பட்டணம்,டிச.22

காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் நாள்க ணக்கில் குப்பைகள் அள் ளப்படாததால் பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். இத னால்' நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள் ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பேரூ ராட்சி 15 வார்டுகளை கொண்டதாகும். இங்கு நாள் தோறும் பேரூராட்சிகள் சார் பில் வீடுகளில் குப்பைகள் அள்ளப்பட்டு வருகின்றன. இதில் நகரில் முக்கிய பகுதிகளில் சாலையோரங்களில் தேங்கி கிடக்கும் குப்பைகள் அள்ளப்படுவதில்லை. குறிப்பாக காவேரிப்பட்ட ணம் பனகல் தெரு பண்டரி நாதர் கோவில் அருகில் நாள்கணக்கில் கிடக்கும குப்பைக ளால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மேலும் அந்த பகுதியில் சுற்றி திரியும் நாய் கள் குப்பைகளை கிளறிசெல் வதால் சாலை முழுவதும். குப்பையாக அளிக்கிறது. இதனால் கடுமையானதுர் நாற்றம் வீசுகிறது. மேலும் நோய்களும் பரவும் அபாய மும் ஏற்பட்டுள்ளது.



இது குறித்து பொதுமக்கள் கூறும் போது, காவேரிப்பட்ட ணம் நகரில் வணிக வளாகங் கள் நிறைந்த பகுதிகளில் குப் பைகள் அதிக அளவில் தேங்கி கிடக்கின்றன. காவேரிப்பட்டினம் ஆர் ஐ அலுவலகம் அருகில், அகரம் சாலை நூலகம் வாயிற்படியில், காவேரிப்பட்டினம் சந்தைப்பேட்டை ரெட் கிராஸ் அலுவலகம் அருகில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நாள் கணக்கில் குப்பைகள் வராமல் கிடக்கிறது. இதனால் கடும் துர்நாற்றம் வீசு கிறது. அவற்றை அப்புறப்படுத்திட பேரூராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.